Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

“கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக”

புத்தகம் 2 | சுன்னாகம்: வெகுதானியஹு மார்கழிமீ உ௪௨ (8-1-39) | இல. 13

கிராமப் பள்ளிக்கூடங்கள்

நமது நாட்டின் கல்வி முறையை நன்கு ஆராய்ந்து எவ்வகையான மாறுதல்கள் அவசியம் வேண்டற்பாலது என்பதைத் தீர்மானஞ் செய்ய ஓர் அதிகாரசபை வேண்டுமென்று ஆசிரியர்களும் பிறரும் பலமுறை அரசினருக்கு மனுப் பண்ணியிருக்கின்றனர். திரு. ஜயதிலகரும் கல்வியதிகாரச்சபையை ஏற்படுத்துவதாக வாக்களித்தனர். கல்வி மந்திரியாகிய திரு. கன்னங்கராவும் அச்சபையை ஏற்படுத்த விரும்பினர். இப்போதும் விருப்பமுள்ளவரா யிருக்கின்றனர். கல்வி மந்திரிசபையார் தாங்கள் எவ்விஷயத்தையும் ஆராயும் வன்மையுள்ளவர்களென்ற எண்ணங் கொண்டவர்களாய் அச்சபையை ஏற்படுத்த மறுத்தனர். மறுத்த சபைதான் கல்வி முறையை ஆராய்ந்து தக்க முடிவுக்கு வருவார்களோ என்று பார்த்தால் அவர்கள் ஒரு முயற்சி செய்வதாயுங் காணேம். வித்தியாபகுதியார் காலத்துக்குக் காலம் ஏதோ தமக்குத் தோன்றியவாறு ஒவ்வொரு திருத்தங்களைக் கையாளுகின்றனர். சமீபத்தில் கிராமப் பள்ளிக்கூடங்களில் விவசாயக்கல்வி கற்பிக்கப்போவதாக முயற்சி செய்கின்றனர். இம்முறையை யார் ஆராய்ந்து முடிவு செய்தனரோ அறியேம்.

இலங்கையின் பலபாகங்களிலும் பலவகையான தொழில்கள் விருத்தியடைந்து வருகின்றன. கிராமங்களில் வேறு தொழில்களும், பட்டணங்களில் வேறு தொழில்களும் காணப்படுகின்றன. கிராமங்களிலுள்ளவர்களின் வாழ்க்கையும் தொழிலும் பட்டணவாசிகளது வாழ்க்கையோடு முரண்பட்டிருந்தும் இருபகுதியிலுள்ளவர்களும் ஒரே கல்வியைக் கற்கிறார்கள். இக்கல்வி பிற்கால சீவியத்தில் உபயோகமில்லாமலிருக்கின்றது. ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் அதிற்படிக்கும் பிள்ளைகளினுடைய சீவியத்திற்கேற்ற கல்வியைக் கற்பிக்க அரசினர் முன்வரவேண்டும். பிள்ளைகள் பெறும் அடிப்படையான கல்வி பின் வாழ்வைச் சிறப்பிக்க வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்ற பழமொழிக்கேற்ப தற்போதைய கல்வி வாழ்விற்கு ஒரு சிறிதும் உபயோகமாகாம லிருக்கின்றது. ‘மற்றிக்’ வகுப்பிற் சித்தியெய்தியவர்கள் தேய்நீர்க்கடை வைக்கும் காலமும் யாழ்ப்பாணத்தில் வந்துவிட்டது. ‘எஸ். எஸ். ஸீ.’ வகுப்பிற் சித்தியெய்திய பல மாணவர்கள் சுருட்டுத் தொழிலில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக விருக்கிறது. வாழ்க்கைக்குரிய கல்வியைக் கற்பிக்க அரசினர் முன்வராதிருப்பது ஆச்சரியம்.

வாழ்க்கைக்குரிய கல்வியைக் கற்பிப்பதே ‘வார்தா’ திட்டத்தின் நோக்கமாகும். இந்தியா முழுவதும் வார்தாதிட்டத்தைப் பின்பற்றப் போகிறது. சென்னையிலும் அத்திட்டம் விரைவில் கையாளப்படும். வித்தியாபகுதியார் ‘வார்தா’ திட்டத்தை ஆராய்வதற்கு ஒரு உத்தியோகஸ்தரை வார்தாவுக்கனுப்பி எவ்வகையில் அத்திட்டம் இலங்கையில் கையாளப்படலாம் என்பதை ஏன் தீர்மானிக்கக்கூடாது. வேலையில்லாத் திண்டாட்டம் மிக்குள்ள இக்காலத்தில் ‘வார்தா’ திட்டம்போன்ற ஓர் கல்வித் திட்டம் இலங்கைக்கு அவசியமாகும்.

திருடாத திருடன்

[வ. நடராசா]

I

நடு நிசி; அந்தகாரமான இருள். அவர் முகத்தில் கையைப் போடுகிறது ஒரு உருவம். முகத்திலிருந்து இரத்தஞ் சிந்துகிறது. பயத்தால் விழிகளிரண்டும் பிதுங்குகின்றன. மறுபடியும் அவர் முகத்தில் கையைப் போடுகிறது அவ்வுருவம். சந்தடி செய்யாது அக்கரத்தைப் பிடித்துக்கொள்ளுகிறார் அவர். கையை ஓங்கிக்கொண்டு அறைவதற்குப் பலதடவை உன்னுகிறார். அவ்வுருவத்தின் கையில் ஏதாவது ஆயுதம் இருந்தாலும் என்ற பயத்தால் மறு கரத்தையும் தேடி இரண்டையுஞ்சேர்த்து இறுகப் பிடித்துக்கொள்ளுகிறார் அவர். பிடித்த பிடியை நெகிழ்க்காமலே 'கொற, கொற' என்று வெளியில் இழுத்துக்கொண்டு வந்தார். "கள்ளனடா! கள்ளன்!!......" என்று பலதடவை கூவினார். இவராற் பிடிக்கப்பட்ட அக்கள்ள உருவமும் "ஐயோ! ஐயோ!! ......" என்று பலமுறை ஓலமிட்டது. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் கையில் ஒவ்வொரு குண்டாந்தடியுடன் கிளம்பிவிடுகிறார்கள். கும்பலாகக் கூடிவிடுகின்றனர்.

அவ்வீட்டிற் படுத்திருந்த ஒருவர் விழித்துக்கொண்டு அந்தப் பாழும் நெருப்புப்பெட்டியைத் தேடிக்கொண்டிருக்கிறார். "அந்தரத்திற்கு அகப்படாத நெருப்புப்பெட்டியா? அகப்படட்டும் ஒருகை பார்க்கிறேன்" என்று எச்சரிக்கிறார். இவர் எச்சரிக்கையை நெருப்புப்பெட்டி மதிக்கவில்லை. ஆயினும் அவர் கையில் ஒருவாறு சிக்கிக்கொள்ளுகிறது நெருப்புப்பெட்டி. விளக்கு ஏற்றப்படுகிறது. விளக்கும், குண்டாந்தடியுடன் வந்தவர்களும் கள்ளனை நெருங்குகிறார்கள்.

கள்ளனைப் பிடித்த அவர்க்குச் சீலை நழுவுவதுபோலிருந்தது. கள்ளனும் பேசாமல் ஒரு கரையில் ஒதுங்கிக்கொள்ளுகிறான். வந்தவர்களெல்லாம் தடியைப் போட்டுவிட்டு, திண்ணைக் குந்திலே குந்திக்கொள்ளுகிறார்கள். ஒருவரை ஒருவர் போட்டி போட்டுச் சிரிக்கிறார்கள். சிரிப்பு இன்னும் ஓய்ந்தபாடில்லை.

II

மறுநாள் ஏதோ விசேடமாம். உபாத்தியாயர் முதநாள் இரவே சென்று தங்கவேண்டியவரானார். வீட்டுத் திண்ணையுடன் சேர்ந்து கிழக்குப்பக்கமாக அடுக்களைக்கு வாசல் விடப்பட்டிருந்தது. அந்த வாசலுக்கெதிரே தலையை வைத்துக்கொண்டே சயனித்தார் உபாத்தியாயர். பலகாரம் சுட வந்திருந்தாள் ஒரு மனுஷி. சுட்டு வைத்துவிட்டு, அடுக்களை வாசலுக்கெதிராகத் தலையை வைத்துகொண்டு உள்ளே படுத்துக்கொண்டாள். வாசற்கதவு மூடப்பட்டிருக்கவில்லையானாலும் தூக்கமிகுதியால் தனக்கு எதிரே தலையை வைத்துக்கொண்டு சயனித்திருக்கிற உபாத்தியாயரைக் காணவில்லை. உபாத்தியாயரது முகத்தில் பழுத்த ஒரு பரு தகருந் தருணத்திருந்தது என்பதை அவள் எப்படி அறிவாள்?

கடல்

தேரூர், வித்துவான் S. உமைதாணுபிள்ளை அவர்கள்

கடலே! கடலே! கருங்கடலே!
கவலை யில்லாப் பெருங்கடலே!
அல்லும் பகலும் அலைகடலே!
ஆழ முள்ள உவர்க்கடலே!
தெள்ளித் தெள்ளி மணல்கொழித்து;
தினமும் முத்தம் பலகொள்வாய்!
மழை பெய்வதும் உன்னாலே!
மண்ணோர் வாழ்வதும் உன்னாலே!
மழையாய்ப் பெய்த நீரெல்லாம்;
மண்ணில் நீயே கொண்டிடுவாய்!
அல்லும் பகலும் அலைந்திடுவாய்!
ஆனந்தக் கூத் தாடிடுவாய்!
எல்லை யில்லா உருவுடையாய்!
இன்ப வாழ்வே தினமுடையாய்!
உன்னைக் காண வருபவரின்;
உள்ள மெல்லாங் கொள்ளைகொண்டு!
உவந்து போகச் செய்திடுவாய்!
உன்னிற் சேருங் கழிபொருளை;
உள்ளம் மகிழ்ந்து கொண்டிடுவாய்!
உயர்ந்த பொருளாய் மதித்திடுவாய்!
உன்னைப் போல எந்நாளும்,
உருவில் மாற்றம் அடையாமல்,
உள்ளத் தன்மை குன்றாமல்,
உண்டோ? உலகில் உவர்க்கடலே!

பலகாரம் சுடுவதில் மனுஷி நல்ல கெட்டிக்காரி. கனவுகள் காண்பது வழக்கம். அன்று ஒருநாளுமில்லாத திருநாளாகும்படி பலகாரங்களை விசேடமாகச் சுட்டுவிட்டாள்போலும். கனவுகள் பல நனவுகளாகும்படி கண்டுகொண்டிருக்கிறாள். கைகால்களை அங்குமிங்குமாக எறிந்தும் உதறியுங்கொள்ளுகிறாள். அப்பொழுதுதான் அவள் தன் கையைத் தலைக்குமேலாகச் சுழற்ற வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது. எதிரே படுத்திருந்த அந்த உபாத்தியாயரது பருவும் அப்பொழுதுதான் உடைந்தது. உபாத்தியாயர் முகத்திற்பட்ட கை அந்த மனுஷியின் கை என்பது இப்பொழுது உங்களுக்குப் புலப்படாமலிருக்கமாட்டாது.

என்னைப் படிப்பித்த ஒரு உபாத்தியாயருடன், வண்ணார்பண்ணையிலிருந்த அவர் தமக்கையார் வீட்டுக்கு நானும் சென்றிருந்தேன். உபாத்தியாயரது தமக்கையார் காப்பியை ஆற்றி ஆற்றிக் கள்ளர் கதைகளை ஆரம்பித்தார். அப்பொழுது உபாத்தியாயர், தான் முன்பு ஒருநாள் தமக்கையார் வீட்டில் பிடித்த இத் திருடாத திருடனின் கதையைச் சொன்னார். சிரிப்பு மிகுதியால் என் வயிறு வெடித்துவிடும்போலிருந்தது. அந்த உருவந்தான் யார்? அக்கள்ள உருவத்தைப் பிடித்த அவர் யார்? தெரியாவிட்டால் நன்றாக நாலு பத்துமுறை வாசித்துப்பாருங்கள்.

மண்ணும் மறிகடலும் மற்றுளவும் எல்லாம்உன், கண்ணில் இருக்கவும்நான் கண்டேன் பராபரமே.

"இறவாத மரணம்"

"வ. இ."

இவ்வுலகில் "இறவாத மரணம்" எய்தியவர் சிலர்; இறவாதிருந்தும் இறந்தவராவோர் பலர். 'இறவாத மரணம்' என்றால் வியப்பாயிருக்கலாம். அதாவது இறந்தும் இறவாத—புகழுடம்பு பெற்ற பெரியாருடைய மரணந்தான் அது. அவர்களுடைய தூல தேகந்தான் அழிகிறது. புகழுடம்பு என்றும் அழியாது நின்று நிலவுகிறது. ஆதலால் அவர்களுடைய மரணம் 'இறவாத மரண'மன்றி வேறென்ன? மற்றும் சாதாரண மக்கள் இறந்த வாழ்வை நடாத்துபவர். அவர்களுடைய வாழ்வு பயனற்ற வெறும் வாழ்வு. அவர்கள் இறந்ததும் சூரியன் மறையவும் ஒளி அகல்வதுபோல அவர்களுடைய பெயர்களும் மறைந்துவிடுகின்றன.

இதுகாறும் 'இறவாத மரணம்' எய்தியவர்களை நோக்கின் அவர்கள் எவ்வெவ் வழிகளில் அடி மரணத்தை யடைந்தனர் என்பது தெளிவாகும். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழ்ந்த கம்பர் இன்றும் நம் முன் நிலவுவதேதனால்? அவருடைய கல்வியின் பெருமையாலன்றோ! அவர் சிறந்த புலவராயிருந்திராவிட்டால், அவர் ஒருகாலத்தில் வாழ்ந்தவரென்று நாம் கனவிலும் கருதுவோமா? மற்றைய நம்போன்றவருடைய பெயர் மறைவதுபோல் அவர் பெயரும் மறைந்திருக்குமே! நெப்போலியன், வீமன், இராமன்—இராவணன் என்போருடைய புகழுக்குக் காரணம், அவர்களுடைய வீரமல்லவா? வள்ளல் தன்மையால் புகழுடம்பு பெற்ற இருபத்தோரு வள்ளல்களையும் நாம் சந்ததிதோறும் பேசிப் புகழுவதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய பிரதியுபகாரம் கருதாத ஈகைதான். இன்னும் புகழுடம்பு பெற்றவர்கள் பலர். அவர் அந்நிலையை அடைதற்குரிய வழிகளும் பலவாயிருக்கின்றன.

நமது காந்தித் தாத்தாவை உலகெலாம் போற்றுவதேன்? அவர் தன்னலங் கருதாத தியாகத்தினால் — தேசசேவையால் இவ்வுலகில் இப்பொழுதே தூலதேகத்தோடு புகழுடம்பையும் இணைத்துவிட்டார். அவருடைய தூலதேகம்அழியும். ஆனால் புகழுடம்பு அழியாதுநிலவும்.

இத்தகைய புகழுடம்பைப் பெறுதல் சாமானிய காரியமல்ல. அதற்கு உயர்ந்த நோக்கங்கள்வேண்டும். தன்னலங்கருதாத சேவைவேண்டும். அதுவும் ஒரு சிறிதுகாலத்திற்குமாத்திரம் போதாது. நமது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்தல்வேண்டும். அங்ஙனம் செய்திடிற்றான் பயன்பெறலாம்.

புகழுடம்பெய்திய பெரியோர்கள் பெற்ற மகிமையை நாம் ஒவ்வொருவரும் கூர்ந்து கவனிப்போமேல் நம் ஒவ்வொருவருக்கும் அந்நிலை எத்துணை அவசியமென்பதை உணர்வோம். பிறவிப்பயனைப்பெற விரும்பும் ஒவ்வொருவரும் இவ்வுலகில் புகழுடம்பை நிலைநிறுத்த வேண்டும். அவனுடைய மரணம் 'இறவாத மரணம்' ஆகவேண்டும.

பொது அறிவு வினாக்கள் இல. 3

1. புகையிரத ஸ்தானத்திலே, அல்லது புகையிரத வீதியிலே சில சமயங்களில், சிவப்புக் கொடியைப் பகலிலும், சிவப்பு வெளிச்சத்தை இரவிலும் காட்டுகிறார்கள். ஏன்?
2. உங்கள் மகாணத்தலைவர் பெயரென்ன?
3. அறுசுவைகள் எவை? கரும்பு, பாக்கு, உப்பு, மிளகு, பாகற்காய், மாங்காய், இஞ்சி, வேப்பிலை எச்சுவையுடையன?
4. பூச்சிச் சாதிகளின் நான்கு வளர்ச்சி நிலைகள் எவை?
5. பறக்கும் மிருகம் என்று எப்பிராணியைச் சொல்லலாம்?
6. முக்கனிகள் எவை?
7. கசரோகத்துக்குச் சிகிச்சை பெறுவதற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டில் எவ்வூரில் வைத்தியசாலை இருக்கிறது. அது எவரது ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டுள்ளது?
8. உமது ஊர்விதானையின் பெயரென்ன? அவர் பதிவிலக்கம் என்ன?
9. கலப்பையிலே உள்ள உறுப்புக்களைப் படம் வரைந்து குறிக்குக.
10. சிங்கப்பூரிலிருந்து இலங்கையில் வந்து இறக்குமதியாகும் இரண்டு பிரதான பொருட்கள் எழுது.
11. இலங்கையிலே குடிசனங்கூடிய குறைந்த மாகாணங்கள் எவை?
12. சொந்த மோட்டார் வண்டியையும், வாடகை மோட்டார் வண்டியையும், எவ்வாறு பிரித்தறிவீர்?
13. ஒரு இறாத்தல் இரும்போ, ஒரு இறாத்தல் பஞ்சோ எது பாரம் கூட?
14. கொழும்பு முதலிய நகரங்களுக்குத் தண்ணீர் எவ்விடத்திலிருந்து அனுப்பப்படுகிறது.
15. இலங்கைப் புகையிரத வீதியிலுள்ள சந்திகளெவை?
16. இன்றைய சூரிய உதய அஸ்தமயன நேரங்கள் எவை?
17. தச்சன் குருவி மரங்களில் எவ்விதம் ஏறும் வழக்கமுடையது?
18. "நா ஆ வ று க மு ல ர்" இவ்வெழுத்துக்களை நிரைப்படுத்தி எழுதினால் சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு பெரியாரின் பெயராகும். அப்பெயர் என்ன?
19. சுவருக்கு வெள்ளையடிப்பதன் காரணம் என்ன?
20. ஒரு ரேகையினால் எல்லைப்படுத்தக்கூடிய பாம்புள தாயின் படம் வரைந்து காட்டுக. அதன் பெயர் என்ன?

ரோமாபுரி "ஜனகர்" அன்ற்ரோனினஸ்

பருத்தித்துறை, த. ச. சிவப்பிரகாசன்

கி. பி. 121-ம் ஆண்டு ரோமாபுரியில் அன்ற்ரோனினஸ் ஜனனமானார். சிசுப்பருவத்திலிருந்தே இவர் மிகு கவனத்தோடு வளர்க்கப்பட்டு வந்தார். கடவுள் பக்தியும் சற்குணங்களும் அமைந்த மூதாதையர்களும் பெற்றோரும், சகோதரியும், ஆசிரியர்களும், பந்துமித்திரர்களுங் கிடைத்ததற்காக இறைவனுக்குத் தன் வணக்கமும் நன்றியுமுரியதென்று இவர் எழுதியிருக்கிறார். பதினோராண்டு முடியமுன்னரே சத்துவகுணம் நிறைந்த தத்துவ ஞானியென்பதை இவர் தன் நடையுடைபாவனைகளாற் சந்தேக விபரீதமறக்காட்டிவந்தார். தவச்சிறந்த தத்துவஞானிகளே இவருக்கு ஆசிரியர்களாக அமைந்தார்கள்.

கி. பி. 161 இல் அன்ற்ரோனினஸ் ரோமாபுரிக்குச் சக்கரவர்த்தியானார். கஷ்டங்களும், கவலைகளும், பொறுப்புகளும் நிறைந்த ஓர் சிம்மாசனத்தில் இவர் வீற்றிருக்க நேர்ந்தது. யூபெரைற்றிஸ் (Euphrates) லிருந்து அத்லந்திக் வரையும், ஸ்கொத்லாந்திலிருக்கும் சீதளமலைகளிலிருந்து ஆபிரிக்காவிலிருக்கும் உஷ்ணமணற்காடுவரையுமுள்ள தேசங்கள் முழுவதையுமரசாளும்பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது.

"நீத்திற வினையினாலே சிறைபடு முயிரையெல்லாம்
பார்த்தனர் உலகவாழ்விற் பயனிலை யென்றுணர்ந்து
கூத்தினர் தன்மைவேறு கோலம்வே றாகுமாபோல்
நீத்தனர் மனத்திற்முன்போல் நிகழ்த்தினர் வழுதிநீதி."

கொடிய யுத்தங்கள், கொள்ளைநோய், பஞ்சம், ராஜத்துரோகம் முதலிய கஷ்டங்களுக்கும் கவலைகளுக்கு மிடையில், சிறிதும் உட்பற்றின்றி நீதிவழுவாது அரசு புரிந்து வந்தார். இருவினைகளையுமறுத்தற்பொருட்டுக் கருமஞ்செய்யாது ஏகாந்தமாயிருக்கும் யோகியினும் ஈசுவரார்ப்பணமாகக் கர்மஞ் செய்பவனே மேலான வீரன், யோகியென்பது இவர் துணிபு. "பலனை விரும்பாது கர்மஞ் செய்பவன் வீரன், ஞானி. உலகப்பற்றிற்குப் பயந்து ஏகாந்தமாயிருப்பவன் கர்மஞ் செய்யப்புகின் கீழிறங்கிவிடுவான்" என்று எழுதியிருக்கிறார். "வாழ்வைப்புனிதப்படுத்துவதெது? தத்துவ ஞானம் ஒன்றுதான். ஞானம் என்பது என்ன? பரிசுத்தமான ஆத்மாவை விருப்ப, வெறுப்பிற்கு மேலாக வைத்திருப்பது; சுயநலம், கபடம், ஹிம்சை முதலியவின்றிக் கடமையைச் செய்வது; மற்றவர்களின் உதவியை நாடாதிருப்பது; எல்லா நிகழ்ச்சிகளையும் இறைவன் செயலென்றிருப்பது; இறுதியில், பயமில்லாது மரணத்தை வரவேற்பது. மரணமென்பதென்ன? பஞ்சபூதங்களின் குலைவு. இது இயற்கையின் நிகழ்ச்சிகளிலொன்று. இயற்கையில் தீமையென்பதில்லை; பயத்திற்குரியதில்லை." என்று இவர் உபதேசித்திருக்கிறார்.

இப்பிரபஞ்சத்திலுள்ள ஒழுங்குகளும், கிரமங்களும் அன்ற்ரோனினஸின் மனதில் 'இறைவன்' என்னும் உணர்ச்சியை உண்டாக்கின. "என்ன காரணத்தைக்கொண்டு இறைவனிருக்கிறாரென்று நம்பி வணங்குகிறாய், கடவுளை நீ கண்டதுண்டோவென்று கேட்பவர்களுக்கு நான் சொல்வது இதுதான். முதலாவது கடவுளைக் கண்களாலும் காணலாம். இரண்டாவது, நான் என்னுடைய ஆத்மாவைக் காணவிட்டாலும், அவரின் சக்தியை உணருகிறேன். அதுபோலக் கடவுளைக் கண்ணாற் காணாவிட்டாலும், அவரின் சக்தியையுணர்ந்து அவரை வணங்குகிறேன்." உண்மை ஞானியென்பதற்கேற்ப இவர் சுருங்கச் சொல்லியிருக்கிறார். ஆனால் இவரின் தர்க்கம் நாஸ்திகர்களுக்குத் திருப்தியைக் கொடாது. கடவுளிருக்கிறாரென்பதை நம்பச் சக்தியில்லாதவர்களைப் பற்றியும், விருப்பமில்லாதவர்களைப்பற்றியும் இவருக்குக் கவலையில்லை. "இறைவனருளின் தோற்றமே ஆத்மா" என்றும், "கடவுள் மனிதனிலிருக்கிறார். மனிதன் தன் ஐம்புலச்சேட்டைகளையடக்கி மனதை உள்ளே திருப்பினால் கடவுளைக் காணலாம்." என்றும் சொல்லியிருக்கிறார்.

"உயிர் உடலோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. உயிரும் உடலுஞ் சேர்ந்தால் மனிதன் என்கிறோம். மனிதன் பிரபஞ்சத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்றான். பிரபஞ்சம் கடவுளோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடவுள் பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மேலானவர். கடவுளின் இலக்கணத்தைப்பற்றி விபரிப்பதில் அன்ற்ரோனினஸ் காலத்தை வீணாக்கவில்லை. "மனுஷனை நேசி. கடவுளைப் பின்பற்று." அவ்வளவுந்தான். குற்றஞ் செய்தவனைத் தாராள மனதுடன் மன்னிக்க வேணுமென்பது இச் சக்கரவர்த்தியின் 'ராஜ நீதி.' அவ்விதமே இவர் சாதனை செய்துவந்தார். ஒருவன் உனக்குத் துன்பஞ் செய்தால் உனக்கு அவன்மேற் கோபம் வருவது சுபாவம். பிழை செய்தவன் தன் பிழையை உணரும்படி செய்வது சமூக வாழ்க்கைக்கு அவசியமானது. ஆனால் நீ குற்றஞ் செய்தவனைப் போல் நடவாதிருத்தல் முக்கியம். அதாவது நீ அவனைத் துன்பப்படுத்தக் கூடாது. அவனுக்குச் சரி, பிழை தெரியாது. அறியாமை அவனைக் குற்றஞ் செய்யப்பண்ணுகிறது. குற்றஞ் செய்தவனின் மன நிலையை நீ ஆராய்ந்து பார்த்தால் உனக்கு அவன்மேற் கோபம் வராது. ஆனால் இரக்கம் வரும்.

உடற்பிரிவின் பின் ஆத்மாவின் நிலையைப் பற்றி அன்ற்ரோனினஸ் ஒன்றுந் தெளிவாகச் சொல்லவில்லை. சிசு கருப்பையிலிருந்து வெளிவருவதுபோல், ஆத்மா உடலைவிட்டுப்பிரிகிறதென்று ஒரு இடத்திற் சொல்லியிருக்கிறார். இப்படிச் சொன்னதிலிருந்து அன்ற்ரோனினஸ் இடம் இந்துக்களின் கொள்கை காணப்படுகிறதென்று சில ஆராய்ச்சியாளர் சந்தேகிக்கிறார்கள்.

கிரேக்க தேசத்திலும் ரோமாபுரியிலுமிருந்த தத்துவ ஞானிகளில் அன்ற்ரோனினஸும் ஒருவர். இவர் ஓர் கர்மயோகி, பெரிய இராச்சியபாரத்தையுஞ் சுமந்துகொண்டு பெரிய ஞானியாயிருந்தவர். இவர் போதனையிலும் சாதனையிலே சிறந்தவர். அந்தந்த நேரங்களில் தன் மனத்திற்றோன்றிய எண்ணங்களைக் குறித்துவைத்தாரே யல்லாது முறையான புஸ்தகம் எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை. தன்னுடைய சாதனைக்குதவியிருப்பதற்காகவே இவர் இப்படித் தன் எண்ணங்களைக் குறித்துவைத்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பகவத்கீதையிலிருக்கும் கர்மயோகத்திற்கும் இவர் சாதனை போதனைகளுக்கும் வித்தியாசம் அதிகமாக விருப்பதாகத் தெரியவில்லை. இதிலிருந்து இவர் அந்தக்காலத்தில் சைவசமய ஆராய்ச்சியில் சிரத்தையெடுத்திருப்பாரென ஊகிக்க இடமிருக்கிறது.

அன்று அன்ற்ரோனினஸ் ஒருகையாற் கடவுளைப் பிடித்துக்கொண்டு மற்றக்கையால் அரசை ஆண்டுவந்தார். இன்று அதே தேசத்தில் முசோலினி ஒருகையால் சாத்தானைப் பிடித்துக்கொண்டு மற்றக்கையால் தேசத்தை ஆளுகிறார். அன்று அன்ற்ரோனினஸ் என்னும் மகான் குற்றஞ்செய்தவர்களை மன்னிக்க வேண்டுமென்று போதித்தார், சாதித்தார். இன்று முசோலினி குற்றஞ் செய்யாதவர்களையுந் தண்டிக்கவேண்டுமென்று போதிக்கிறார், சாதிக்கிறார்.

பொய்யுணர்வா யிந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன், உய்யும் வகையும் உளதோ பராபரமே.

ஆரோக்கியம்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும் அடைதற்குக் கருவி சரீரம், ஆதலினல் மரண பரியந்தம் தங்கள் தங்கள் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் ஆவசியகம். ஆகையாற் சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கும் முறைகளைச் சொல்வாம்.

நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே விழித்தெழுந்தால் புத்தி தெளிவடையும்; வாதபித்தங்கள் தத்தம் நிலையைப் பொருந்தும்.

காலையிலே சிலம்பமேனும், குதிரையேற்றமேனும், கானடையேனும் செய்துகொண்டு வந்தால் சரீரம் இறுகும். காலந்தோறும் ஒழுங்காகப் போசனஞ் செய்துகொண்டு வருதல் போலவே, அதினின்று பிரியும் மலசலாதிகளை ஒழுங்காக மோசனஞ் செய்துகொண்டுவருதலும்ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்.

இயல்பாகிய துவர் உள்ள நாள் இலைகொம்பு என்பவைகளினலே பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும். இராவிலே நெடுநேரஞ் செல்லுமுன் போசனஞ் செய்துகொண்டு, அது சீரணமானவுடனே சிக்காம் படுத்து நித்திரைசெய்து சூரியன் உதிக்க ஐந்துநாளிகைக்கு முன்னே விழித்தெழுந்துவிடப் பழகிக்கொள்ளல் வேண்டும். உண்ட உடனே சீரணமாகுமுன் சயனிக்கலாகாது.

இரவிலே சேஷித்த அன்னத்தில் ஒரு சுக்குத் துண்டைப்போட்டு ஆறிய வெந்நீரை இட்டுவைத்தல் வேண்டும். அந்தப் பழஞ்சோற்றைக் காலையிலே அந்த நீராகாரத்தோடு புசித்தல் வேண்டும். அப்படிப் புசித்தால் வாதபித்தம், போம், தாகம் நீங்கும், பசியுண்டாகும்.

இரண்டுகால போசனமே உத்தமம். மூன்றுகால போசனம் கொள்ளல் வேண்டுமானல் காலையிலே மூன்றே முக்கால் நாழிகையுள்ளும் உச்சிக்காலத்திலே பதினோந்து நாழிகையுள்ளும் போசனஞ் செய்தல் வேண்டும்.

சரீர முயற்சியேனும் மனமுயற்சியேனும் செய்து இளைத்தவுடனே போசனம் பண்ணலாகாது. போசனம் செய்தவுடனே நூறடியுலாவலாகிய குறுநடை கொள்ளல் வேண்டும்.

ஆ. ஞானம்பிகை, VII-ம் வகுப்பு

குட்டிக்கதை — பாலர்பகுதி

சவுக்குமரம்

"ச. மு."

சவுக்கன் அழகான ஒரு பையன். பள்ளிக்கூடத்திலும் அவனை எல்லோரும் விரும்பினர். அழகுக்கேற்ற படிப்பு. படிப்புக்கேற்ற ஒழுக்கம். ஆகவே அந்த ஊரவர்கள் எல்லோரும் சவுக்கனைத் தங்கள் பிள்ளைபோல் மதித்துவந்தனர்.

பொழுதுபோக்குக்காக ஒரு ஆடு வளர்த்தான். ஒரு நிமிஷமேனும் ஆட்டைவிட்டுப் பிரியான். தன் கையாலேயே அதற்கு இலைகுழைகளை ஊட்டிவந்தான். நாட்கள் செல்லச் செல்ல அவன் அன்பும் வளர்ந்துகொண்டே வந்தது. சிலசமயங்களில் அது தன் எண்ணத்தின்படியே அங்கும் இங்கும் சென்று இரைதேடும். சவுக்கனை நேசித்ததுபோலவே அவன் ஆட்டையும் ஊரவர்கள் நேசித்தனர். அதன் அறிகுறியாக எப்போதும் ஒரு பூமாலை கழுத்திலிருக்கும்.

பங்குனி மாசம். வெய்யில் அதிகம். இலைகுழை ஆடாத நேரம். இரைதேடுவதற்காக ஆடு எங்கேயோ சென்றது. வயிரூர மேய்ந்துவிட்டு ஒரு வேப்பமர நிழலில் படுத்து உறங்கியது. அதே மரத்தின் கீழ் நாய் ஒன்று குறுக்கும் மறுக்கும் ஓட்டமும் நடையுமாகச் சென்றது. விளையாட்டுப்புத்தியின் காரணமாக அந்த நாய்க்கு முழுப் பயத்துடனும் பக்கத்திலிருந்த கல்லால் சவுக்கன் எறிந்தான். அக்கல்லு நாயைத் தாண்டிக்கொண்டு அப்பால்நிம்மதியாகப் படுத்திருந்த ஆட்டின் வயிற்றில் பட்டது. பட்டதும் பதைபதைத்து உருண்டுபுரண்டது. சிறிது நேரத்திற்குப்பின் உயிர் நீங்கியது. அந்தக் காட்சியை அவனல் பொறுக்க முடியவில்லை. தன்னைத்தானே உயிர்போக்க நினைத்தான். இதையறிந்த பிரமன் அவன்மேற் கருணைகொண்டு அதை சவுக்குமரமாக மாற்றினர். சவுக்கன் என்ற பெயரைக்கொண்டே அம்மரத்துக்கும் பெயர் வைத்தார். ஆகவே இச்சவுக்குமரம் பிரேதம் புதைக்கும் இடங்களில் நிற்பதைக் காணலாம். பிரேதம் புதைக்கும் இடத்திற்குச் 'சவுக்காலை' என்ற பெயர் இக்காரணத்தைக்கொண்டு வந்ததுபோலும்!

அன்றும் இந்துக்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டினர்கள். இன்றும் அவர்களே உலகிற்கு அஹிம்சையைப் போதிக்கிறார்கள். கிறீஸ்த சமயத்தையும், மகமதியசமயத்தையும் ஏன், புத்தசமத்தையுந் தழுவுவோர் இன்று "ஹிம்சை"யையே ராஜநீதியாகக்கொண்டிருக்கிறார்கள். அபிஸீனியர்களைப் பரிசுத்தப் படுத்துவதற்காக முஸோலினி அவர்கள் மீது விஷப்புகையையும் குண்டுகளையும் பிரயோகித்தார். இன்று ஜப்பானியர்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காக அவ்விதஞ் செய்கிறார். "சீனர்களைச் சீர்திருத்துவதற்காகவும் அவர்கள் பழக்கவழக்க ஒழுக்கங்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவுமே நாங்கள் சண்டை செய்கிறோம். இது ஒரு பரிசுத்தமான யுத்தம் (Spiritual Warfare) எங்கள் நோக்கத்தை இந்தியர்களும் இலங்கையர்களும் அறியாது எங்கள் மீது குறை கூறுகிறார்கள்" என்று ஓர் ஜப்பானிய அதிகாரி சமீபத்தில் கொழும்புக்கு வந்தபோது சொன்னராம். உண்மையாகவிருக்கலாம். இந்தக் காந்திக்கு ஜப்பானியரின் பரிசுத்தமான எண்ணத்தைப்பற்றி விளங்காமல் வீணாக 'அஹிம்சை, அஹிம்சை' என்று கதறுகிறார்! புத்தர் உபதேசித்த மதத்தைக் காப்பாற்றும் நோக்கத்தோடு பர்மாவிலுள்ள புத்தகுருக்கள் சோனகரையும் இந்தியரையும் சமீபத்தில் கொலை செய்தார்கள்.

'அஹிம்சை, நீதி, தர்மம்' என்னும் பதங்கள் இந்துக்களுக்கு அந்தக்காலத்திலும் இந்தக்காலத்திலும் ஒரே பொருள்தான். ஆனல் மற்றைய சமயத்தாருக்குக் காலத்திற்குக்காலம் இப்பதங்களின் பொருள் மாறுதலடைகிறது.

தற்பொழுது இந்தியாவிலிருக்கும் மகான்களின் போதனைகளையும் சாதனைகளையும் பின்பற்ற எடப்பதே இலங்கை வாழ் இந்துக்களின் கடமை. எங்கள் அரசியல் நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாயிருக்கிறது. சத்தியாக்கிரகம் ஒன்றே எங்களுக்கு விமோசனத்தையளிக்கவல்லது.

அந்தமுடன் ஆதி அளவாமல் என்னறிவில், சிந்தாவான் சோதி துலங்குமோ பைங்கிளியே.

இந்திரனைக்கொன்ற 'சிகரட்'

சகோதரர்களே!

சில வருடங்கட்கு முன் எம் கிராமத்தில் 'கட்டையர்' என்ற பெரும் தனவந்தரொருவ ரிருந்தார். இவருக்குப் பணம் எவ்வளவு அதிகமோ, அவ்வளவுக்கு அதிகமாக அசட்டுக்குணமும், லோபகுணமும் உண்டு. இவருடைய பதவிக்கிணங்க ஒரு மகனிருந்தான். அவன் மனோகரமாகத் தன் நண்பர்களுடன் உலாவுவதும், துவிச்சக்கரவண்டியில் ஊர்வலஞ் செய்வதும், கீரிமலை போன்ற புண்ணிய இடங்களைத் தரிசிப்பதும், நண்பர்களுடன் சினிமாப் பார்ப்பதும், படிக்கும் பிள்ளைபோல் புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு யோகாப்பியாசம் செய்வதும் இவ்விதமாகப் பொன்போன்ற காலத்தை ஓட்டியவண்ணமாக இருந்தான். இந்திரன் என்ற இந்த ஆசாமிப் பேர்வழிக்கு இவனின் மேம்பாடுடன் மதிக்கத்தக்க நண்பனான ஆசாமி ஒருவர் 'ஆச்சித்துரை' என்ற பெயருடனிருந்தார். அந்தக் காலத்துக்கேற்ப ஆச்சித்துரையின் மூளை சரியான முதலாம் கிளாஸ் மக்கு. கட்டையர் மகன் இந்திரனுடன் சிநேகமாயிருந்தால் தனக்கு அதிக மதிப்பு உண்டென்று அவனுடன் தோழமை பூண்டுவந்தான்.

ஆச்சித்துரை இடைக்கிடை சாவி கொடுத்து "இரவுக்கு றீகல் தியேட்டரில் நவீனசாரங்கதரா மிகவும் ஜோராயிருக்கும் 'வ்வாதரை' ஒரு வெருட்டுப்போடப் படம் பார்த்துவிடலாம். பத்துரூபா சிமித்திரை" என்று கதை அடித்து இலவசமாகப் படம் பார்க்கும் இலேசுத்துரை. இந்திரன் தன் கொலிச் (College) படிப்புக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டான். கட்டையரும் மகனைப் பற்றி விசாரிப்பதில்லை. ஏனென்றால் தன்னுடையமகன் அடுத்தவீட்டில் உபாத்தியாரிடம் பாடங்கேட்கப் போய் விட்டான். ரெம்பக் கெட்டிக்காரன் என்ற வீணெண்ணம் அவருக்கு ரொம்ப உண்டு. ஆனால் உண்மையில் இந்திரன் 'சிகரட்' (Cigarette) டும் கையுமாக, ஆச்சித்துரைவீட்டில் உள்ள ஊர் வம்பு எல்லாம் கைவிரல் விட்டு எண்ணிக்கொண்டு இருப்பான். நாளடைவில் இந்திரன் வீட்டுக்கும் எஜமானுகிவிடவே பொக்கிஷம் இவனுடைய கவனத்தில் வந்துவிட்டது. ஆச்சித்துரையும் இந்திரனுடைய வீட்டுக்கு வந்துபோகவும் பழகிக் கொண்டான். கட்டையர் பணக்காரனானாலும், பக்கத்திலுள்ள கடைக்கருகில் வந்து, தன் மகனைப்பற்றிப் புகழுரைகள் சொரிவதுதான் அவருக்கு நித்தியவேலை.

சகோதரர்களே! ஒருநாள் இந்திரனுக்கு இருமல் என்ற ஓர் வியாதி காணப்பட்டது. மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு உடனே கொண்டுபோகப்பட்டான். டாக்டர் அவனைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுவிட்டார். அவருக்கு அடங்காத ஆத்திரமும் கோபமும் ஒன்றுசேர்ந்தது. "Mr. கட்டையரே, துட்டர்களால் நேர்ந்த இவ்வியாதிக்கு இயமனிடமல்லவா மருந்து; எம்மிடமேது? நாள்வீதம் எத்தனை சிகரட் பாவிக்கின்றார்? இத்தனை

கல்வியின் சிறப்பு

ஒருவற்கு நன்மை தீமைகளை நன்கு விளக்கி அவ்வழியிற் புகாமற் றடுத்து நன்னெறியில் போக்குவது கண்ணென்று சொல்லப்படும் கல்வி.

> "கல்வி யுடையவர் கண்ணுடையவரே
> கல்லா தவர் முகத்திரண்டு புண்ணுடையவரே"

என்பது ஆன்றோர் வாக்கு. கல்லாதவர்கள் மக்களுடம்பிற் பிறந்திருந்தும் விலங்கினை ஒப்பாவர். அன்றியும், மக்களுட் பதடியுமாவர். கேடில் விழுச் செல்வமாகிய கல்வியைப் பெற்றவர், நீரால், நெருப்பால், கள்வரால், தாயத்தாரால், பிறரால் அழிவுறும். எனைச் செல்வத்தையும் செல்வமென மனங்கொள்ளார்.

> "கற்றோர்க்குக் கல்வி நலனே நலனல்லால்
> மற்றோ ரணிகலம் வேண்டாவாம்"

என்பதனால் கல்வியின் சிறப்பு எத்துணைத்தென்பது வெள்ளிடைமலை. இதற்கேற்பக் கற்றவர், குஞ்சியழகையும், கொடுந்தானைக் கோட்டழகையும், மஞ்சளழகையும் அழகென மதித்திடார். கற்பக் கழிமடமஃகும். மடமை நீங்கின் அறிவுண்டாம். அவ்வறிவு தொடுமணற்கேணி நீர் சுரப்பதுபோலக் கற்குந்தோறும் பெருக்கமுறும். அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்பும்.

ஒருபிறப்பிற் கற்ற கல்வி அதனைக் கற்ற அவ்வுடம்போடொழியாமல் உயிரோடு எழ்பிறப்பினும் செல்லும் எமாப்புடைத்தென்பர். உயர்ந்தோரால் உறுதியென எடுக்கப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் தரவல்லது கல்வியெனின் அதனினும் சிறந்தது என்னுளது.

தி. உ. அருள்நாயகம்
S. S. C. மாணவன், கோப்பாய்.

வயதுப் பாலனுக்கு அட இருமலா? என் ஏங்குகின்றீர் சொல்லும்" என்று கடாவினார். "ஆர் என்னையா! என்மகனா? சிகரட்டா?" என்று தடதடத்தார் Mr. கட்டையர். டாக்டர் உள்ள இரகசியத்தைச் சொன்னார். Mr. கட்டையர் வந்தவழியே மகனைக் கொண்டு சென்றார். தன் மகனுக்கு வந்த போாபத்தெல்லாம் ஆச்சித்துரையென்றவனாலும், மற்றும் வம்பர்களாலும் என்று அப்போதுதான் எண்ணி, இருமல் இந்திரனைப் பார்த்து ஆச்சித்துரையை இன்றுடன் விடவேண்டுமென்று கெஞ்சினார். "பிள்ளைதான் வயதில் மூத்தால் பிதாவின்சொற் புத்திகேளான்," இந்திரனுக்குக் கோபம் பொங்கிற்று. கட்டையர் மொட்டையாகிய தலையைக் குட்டிக்கொண்டு கண்ணீர் விட்டார். சிகரட்டும் ஆச்சித்துரையும், இந்திரனுடைய இருதயத்தைக் கொன்றுவிட்டார்கள் என்று சொல்லவே என் மனம் நடுங்குகின்றது.

M. S. S. செல்வன் (174)
கொல்லங்கலட்டி.

அகமேவும் அண்ணலுக்கென் அல்லலெல்லாஞ் சொல்லிச், சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே.

பசுபதியும் பார்த்தனும்

பஞ்சபாண்டவர்களில் ஒருவனுகிய பார்த்தன் பகைவரை வெல்லுவதற்கு ஓர் அஸ்திரம் பெறும் பொருட்டு கைலைமலைச்சாரலில் இருந்து தவம் புரிந்தான். பிறவிக் குருடனுகிய திருதராட்டிரன் புத்திரனுகிய துரியோதனன் மூகன் என்னும் அசுரனைப் பன்றி உருவத்தோடு சென்று கொல்லும்படி கேட்டான். அவன் உடன்பட்டு ஏன உருவத்தோடு கைலையை நண்ணினன். இதை அறிந்த சாம்பவமூர்த்தி வேடனுகவும், மாணிக்கவல்லி வேடுவிச்சியாகவும், இளமுருகக்கடவுள் குழந்தையாகவும், கணங்கள் யாவும் நாய்களாகவும் வந்தார்கள். மூகவேனமானது சீறி உறுமித் தவத்தில் இருந்த பற்குணன் மேற் பாய்ந்தது. அப்போது சிவ வேடன் விண்ணவர் கோன் மதலையை வானவைத் துய்க்குமோ என ஐயுற்று ஓர் சரம் தொடுத்தார்.

அதே நேரத்தில் காண்டீபன் அம்பைத்தொடுத்து முகத்தை ஊடுருவச் செய்தான். இருவர் விட்ட வாழியால் ஏனம் உயிர்துறந்தது. பின்னர் அநாதிமல முத்தராகிய சிவபெருமான் தனஞ்செயனுடன் வாதமிடத் தொடங்கினர். பற்குணன் சொல்லுகின்ருன், வேடத் தலைவ கேள் எனக்குக் கேடியைக்க வந்த கேழலை நான் கொன்றேன் அல்லாமல் இது எனக்கு உணவுக்கல்ல. ஆனல் இது உனக்கு உணவாகும் என்ருன். சிவ வேடன் நீ யார் என்று வினவ யான் குருகுலத் தலைவன் தம்பி என்ருன் அர்ச்சுனன். நீதானு இதுகாறும் வேடரை ஒடுக்கி அவர்களைக் கூற்றுவனுக்கு விருந்து இட்டது என்று சொல்லி ஓர் கணையை விடுத்தார். தம்மோடு சரந்தொடுப்பவர் சங்கரர் என்று அறியாமல் பரமமூர்த்தியாகிய அண்ணல் மீது விஜயன் இடைவிடாது சரங்கள் தொடுத்தான்.

ஆதிமூர்த்தி விஜயன் வில்லின் இருந்த நாணை அறுத்தார். உடனே கற்பக வேந்தன் புதல்வன் வெகுண்டு சிவ வேடன் முடியிற் தாக்கினன். ஆதிமூர்த்தியாகிய சாம்பவநாதரும் இளைத்தார். மதி வாடியாது. கங்கை பேரிரைச்சலோடு ஓடத் தலைப்பட்டது. அமிர்தம் சிதறுண்டது. உலகத்திலேயுள்ள சரம் அசரம் முதலிய எல்லாவற்றிலும் அந்த அடிபட்டது. உடனே கைலைநாதன் இடப வாகனத்திற் தோன்றிப் பாசு பதாஸ்திரம் கொடுத்தார்.

“வஞ்சமனத் தஞ்செரடுக்கி வைகலுநா பூசனையால்
நஞ்சமுது செய்தருளும் நம்பியென வேகினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்தகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுஞ் சோளிலியெம் பெருமானே.”

அ. சிதம்பரப்பிள்ளை,
புன்னாலைக்கட்டுவன்.

“புத்திமான் பலவான்”

டிறேக், குக் என்போரே உலகத்தைச் சுற்றி வந்தார்கள் என்பது சரித்திரக் கதைகளாகும். ஆனல் புராணக்கதை ஒன்றுண்டு.

சிவபிரான் கைலாயமலையில் உமாதேவியாருடன் வீற்றிருந்தார். அச்சமயம் அவரிடம் ஒரு மாங்கனி இருந்தது. நாரதர்தான் கொடுத்திருக்கவேண்டும். நாரதர் வந்தால் கலகந்தானே.

சிவபிரானுக்கு இரு பிள்ளைகள் உண்டு. ஒருவர் விநாயகர், மற்றவர் ஆறுமுகம். தம்மிரு மக்களையும் அழைத்தார்; “யார் உலகத்தைச்சுற்றி வருகின்ருர்களோ அவருக்கே இவ்வரிய கனியை ஈவேன்” என்ருர்.

“என் அண்ணருக்குச் சப்பைக் கால், பெருவயிறு, வயிறையே தூக்கமாட்டார். வாகனமே பெருச்சாளி. தானே நடக்கமாட்டாத பெருச்சாளி, அண்ணனையும் போதாக்குறைக்கு அவருடைய வயிற்றையும் தூக்கிக்கொண்டு உலகத்தைச் சுற்றி வருவதென்ருல் நடக்கக்கூடிய விடயமா? என்ன? இக்கனி எனக்குரியதே” என எண்ணியபின்னர், தன் மயில்மிசை ஏறி விரைவாகப் பறந்து உலகத்தைச் சுற்றிப் புறப்பட்டார்.

தன் தம்பி மயிலின்மிசை ஏறி விரைவாகச் செல்வதைக் கண்ட விநாயகர் மனம் எரிந்தது. என் செய்வது எனப் பலவாறு யோசித்தார். “அன்பே உலகம்; அன்பே சிவம். ஆகையால் சிவனே உலகம்” என்ற துணிவு ஏற்பட்டது உடனே தன் தந்தையைச் சுற்றி வலம் வந்து அடிபணிந்து நின்ருர். சிவபிரான் மூத்த குமாரனின் புத்தியை மெச்சி, அவரை வாரித்தூக்கித் தொடைமேல் வைத்துக் கனியை ஈந்தார். விநாயகர் வாயினின்றும் பழரசம் சொட்டுச் சொட்டாய் விழுந்தது.

மயில்மிசை சென்ற மயில்வேற்றிவிளையாடு முருகன் இளைக்க இளைக்க வந்தார்; உள்ளதை அறிந்தார்; வெட்கமுற்ருர்; என்னே! “புத்திமானே பலவான்”

நா. தனலட்சுமி, (53)
சை. பி. வி. சாலை, மூளாய்.

வெளிவந்துவிட்டது!
வெளிவந்துவிட்டது!!
விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய
யாப்பிலக்கணம்
(திருத்தமான பதிப்பு)
விலை சதம் 35.
தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.

ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனுர் சிற்சுகந்தான், பாவிக்குங் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே

நன்றி மறவாமை

“ நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று ”

என்னும் திருக்குறளில், தனக்கு ஒருவன் முன்செய்த நன்மையை மறந்து விடுவது அறமன்று. ஒருவன் செய்த தீமையை அன்றே மறந்து விடுக என்று கூறப்பட்டிருக்கிறது. எதை மறந்தாலும், தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலானவர்கள் செய்த நன்றியை மறத்தல் ஆகா.

தாய் செய் நன்றி

தாயானவள், குழந்தையைப்பெற்று கண் திறவாமல் இறகு முளையாமல் இருக்கிற சிறு குஞ்சுகளை பறவைகள் எவ்விதம் காக்கின்றனவோ, அவ்விதம் காக்கின்றாள்.

“ முந்தித் தவம் இருந்து முன்னூறு நாட்சுமந்து
அந்திபக லாய்ச்சிவனை ஆதரித்துத்
தொந்தி சரிய பெற்றெடுத்த ...... ”

தாயானவள்செய்த நன்றியையும் மறக்கலாமா. ஆ, பாவம், பாவம். இப்படி மறப்பவர்கட்கு அருாரகமே கிடைக்கும்.

தந்தை செய் நன்றி

தந்தையானவன் ஊண் ஊட்டி, உடை உடுத்தி, தன் முழு உயிரோடும் காப்பாற்றுகின்றான். இப்படியெல்லாம் செய்து கல்வி கற்பித்து, திருக்குறளின்படி,

“ தந்தைமகற் காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் ”

என்றவாறு சபையின் கண்ணே முந்தியிருக்கச் செய்கிறான். அப்படிப்பட்ட நன்றியைச் செய்த தந்தையானவனுக்கு,

“ மகன்தந்தைக் காற்று முதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல் ”

என்றவாறு நடத்தல் வேண்டும் அல்லவா.

குருவானவர் செய்நன்றி

ஆமையானது தானிட்ட முட்டைகளை இடைவிடாது நினைப்பதுபோல குருவானவரும் சீடனுக்குப் புத்தியுண்டாக வேண்டுமென்று திருவுளத்தில் நினைத்து போதனை செய்கிறார். ஆசிரியர் சீடனைத் தேடிவர அவரைக்கண்ட மாத்திரத்தில் கும்பிடப்போன தெய்வம் குறுக்காகவந்தது என்றெண்ணி அதிசீக்கிரமாய் எழுந்திருந்து எதிர்கொண்டுபோய்த் தீர்க்க தண்டனம் சமர்ப்பித்து கைகட்டி வாய்பொத்தி உபசரியாமல் குந்தியபடி இருந்து எனடா குருக்கள் எங்கடா வந்தாய் சாமி! சாமி தண்டம் ஐயா என்கின்ற கர்வ புஞ்சமாகிய சர்வ மூடனைப் போலக் குருவை அசட்டைபண்ணினவன் அதோகதியடைவான்.

அரசனானவன்

“ மாகா வலனுவான் மன்னுயிர் காக்குங்காலை
தான்தனக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிரு பகைத்திறத்தால் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தந்தீர்த்து அறங்காப்பா னல்லனோ ”

என்றவண்ணம் செங்கோல் செலுத்திய நன்றியை மறத்தல் தகாத காரியமாகும். ஆதலால் ஒருவர் செய்த நன்றியை மறக்கலாகாதென்க.

அ. சின்னத்துரை J. S. C. மாணவன்,
காவெட்டி கிழக்கு, கட்டைவேலி,
மெ. மி. பாடசாலை

ஈழகேசரி இளைஞர் சங்கம்

குழந்தைகளே!

புது வருஷத்தின் பலனை உங்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்படவேண்டும். உங்கள் உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு முக்கியமாக ஒன்று செய்யவேண்டும். அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? ஒவ்வொருவரும் தத்தம் சந்தா எண்களைப் புதுப்பிக்க வேண்டும். அப்போதுதான் உங்களது அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் நாம் அறியநேரிடும். பின்பு என்னையாவது பாட்டியையாவது குறை கூற வேண்டாம். நேரகாலத்தோடேயே அறிவிக்கின்றோம்.

எல்லோருக்கும் நமஸ்காரம்

இங்ஙனம்
“ தாத்தா—பாட்டி ”

புதிய அங்கத்தவர். (முற்றொடர்)

125/182. செ. முருகானந்தன்.
183. மு. ஆள்வாப்பிள்ளை.

விண்ணப்பப் பத்திரம்

திகதி...............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து “ ஈழகேசரி இளைஞர் சங்கத்”தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறு மாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்...
பிறந்த திகதி..........மாதம்...............வருடம்............
விலாசம்...
....
பெற்றோர், அல்லது உபாத்தியாயர்
கையொப்பம் ....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி ‘தாத்தா’ c/o ‘ஈழகேசரி’, சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு “ திருமகள்நிலைய” த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் ‘தலையாட்டி’ யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு ஜனவரி 8உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது